## பாடம் - 14 | الدرس الرابع عشر

### நபிகளாரின் அற்புதங்கள் | من معجزاته ﷺ

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட மிகப் பெரும் அற்புதம் திருக்குர்ஆனாகும். இது மறுமை நாள் வரை நிலைத்து நிற்கும் அற்புதமாகும். இது இலக்கியவாதிகளை வென்றது. பண்டிதர்களை திகைக்க வைத்தது. இதுபோன்ற பத்து அத்தியாயங்களை அல்லது ஒரு அத்தியாயத்தை ஏன் ஒரு வசனத்தையேனும் கொண்டு வாருங்களென்று அல்லாஹ் திருக்குர்ஆன் மூலம் எல்லோருக்கும் சவால் விட்டான். திண்ணமாக திருக்குர்ஆன் ஓர் அற்புதம் தான் என்பதற்கு இணைவைப்பவர்களே சான்று பகர்ந்தார்கள்.

ஒரு நாள் இணைவைப்பவர்கள் தங்களுக்கோர் அற்புதம் காட்டும்படி நபிகள் நாயகம்(ஸல்)அவர்களிடம் கேட்டனர். அதற்கவர்கள் சந்திரன் பிளப்பதைக் காண்பித்தார்கள். சந்திரன் இரு கூறாகப் பிளந்தது. பல முறை அவர்களின் விரல்களிலிருந்து நீர் பீறிட்டிருக்கிறது. அவர்களின் உள்ளங்கையிலிருந்த கல் இறைவனைத் துதி (தஸ்பீஹ்) செய்தது. பின்பு அதை அபூபக்கர், உமர், உஸ்மான்(ரலி) ஆகியோரின் கையில் வைத்தார்கள். அப்போதும் அது தஸ்பீஹ் செய்தது.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது உணவு தஸ்பீஹ் செய்ததை மக்கள் கேட்டனர். கற்களும் மரங்களும் அவர்களுக்கு ஸலாம் கூறியிருக்கின்றன. நபிகள் நாயகத்தை விஷம் கொடுத்துக் கொன்றுவிட வேண்டுமென்பதற்காக ஒரு யூதப் பெண் விஷம் கலந்த ஆட்டிறைச்சியை அன்பளிப்பாக வழங்கியபோது அது அவர்களிடம் பேசியது. ஒரு கிராமவாசி தனக்கோர் அற்புதம் காட்டும்படி அவர்களிடம் வேண்டியபோது நபியவர்கள் ஒரு மரத்தைத் தம்மிடம் வரும்படி ஏவினார்கள். அது வந்தது. பிறகு அதைத் திரும்பிச் செல்லுமாறு பணித்ததும் அதன் இடத்திற்கே அது திரும்பிச் சென்றது. பாலில்லாத ஒரு ஆட்டின் மடியை அவர்கள் தடவியதும் அதில் பால் சுரந்தது. அதைக் கறந்து தாமும் அருந்தி அபூபக்கருக்கும் அருந்தக் கொடுத்தார்கள். அலீ(ரலி) அவர்களுக்கு கண்வலி ஏற்பட்டபோது நபியவர்கள் அவர்களின் கண்களில் உமிழ்ந்ததும் அவர்கள் குணமடைந்தார்கள். ஒரு நபித்தோழரின் கால் முறிந்தபோது அதை நபியவர்கள் தமது கையால் தடவியதும் அது குணமடைந்தது. அனஸ் (ரலி) அவர்களுக்காக நீண்ட ஆயுளுக்கும் அதிகமான செல்வத்துக்கும் குழந்தைப்பேற்றுக்கும் துஆ செய்தார்கள். அவற்றில் அல்லாஹ் அவர்களுக்கு பரகத் செய்யும் படியும் வேண்டினார்கள். அதன்படி அவர்களுக்கு 120 குழந்தைகள் பிறந்தன. நபிகள் நாயகம் (ஸல்) மிம்பரில் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது அவர்களிடம் பஞ்சம் குறித்து முறையிடப்பட்டது. அவர்கள் அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள். வானில் மேகமே இல்லாதிருந்தும் உடனே மலைகள் போன்று மேகங்கள் உருவாகி மறு ஜும்ஆ வரை கடும்மழை பெய்தது. மீண்டும் அவர்களிடம் கடும்மழை பற்றி முறையிடப்பட்டது. உடனே அல்லாஹ்விடம் துஆச் செய்தார்கள். மழை நின்று மக்கள் வெயிலில் நடந்து சென்றனர்.

நபியவர்கள் அகழ் தோண்டும் பணியில் கலந்து கொண்ட 1000 பேருக்கு சுமார் இரண்டரை கிலோ கோதுமையையும் ஒரு ஆட்டையும் கொண்டு உணவளித்தார்கள். அவர்கள் அனைவரும் வயிறு நிரம்பி திரும்பிச் சென்றனர். உணவு குறையாமல் அப்படியே இருந்தது. இதுபோன்றே பஷீர் பின் ஸஅத் (ரலி) யின் மகள் தனது தந்தைக்கும் மாமாவுக்கும் கொண்டு வந்த சிறிது பேரீத்தம் பழத்தை நபிகள் நாயகம்(ஸல்) அகழ்ப் போரில் கலந்து கொண்ட அனைவருக்கும் உண்ணக் கொடுத்தார்கள். மேலும் அபூஹுரைரா(ரலி) அவர்களின் பையிலிருந்த சிறிது உணவை படையினர் அனை வருக்கும் வயிறார உண்ணக் கொடுத்தார்கள். நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள், தங்களைக் கொல்வதற்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்த நூறு குறைஷிகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு சென்றார்கள். அவர்களால் நபியைப் பார்க்க முடியவில்லை. சுராக்கா பின் மாலிக் நபிகள் நாயகத்தைக் கொல்வதற்காக அவர்களைப் பின் தொடர்ந்தார். அவர் நெருங்கி வந்தபோது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கெதிராகப் பிரார்த்தனை செய்தார்கள். அவருடைய குதிரையின் கால்கள் மண்ணில் புகுந்தன.